II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 97 of 2022**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 10.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : R. Vasanthy | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

முதல் விசாரணை=ள

நான் இந்த வழக்கின் 1ம் மனுதாரர். இன்று மா.சா.1 ஆக என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை என நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் 20 வரை குறியீடு செய்ய வேண்டுகின்றேன்.

1. முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1.

2. இறப்பு அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2

3. பிரேத விசாரணையின் சான்றிட்ட நகல் அறிக்கை ம.சா.ஆ.3.

4. விபத்தில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் A.I.R. and MB reportயின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4.

5. இன்தூரன் பாலிஸியின் சான்றிட்ட நகல நகல் ம.சா.ஆ.5.

6. R.C. Book-ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6.

7. National Root Permit ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7

8. மாதிரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8

9. From 38 fites Certificate of Ahamebad Gujaraj Certificateன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.9.

10. Pollution Certificate ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.10.

11. எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.11.

12. எனது கணவரின் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.12.

13. எனது ஆதார் நகல் ம.சா.ஆ.13

14. 4ம் மனுதாரரின் ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ.14.

15. குடும்ப அட்டையின் நகல் ம.சா.ஆ.15.

16. எனது மகளின் பிறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.16.

17. எனது கணவரின் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ.17.

18. எனது கணவரின் சம்பள சான்றிதழின் நகல் ம.சா.ஆ.18.

19. எனது கணவரின் சம்பள Receipt -ன் ஆன்லைன் நகல் ம.சா.ஆ.19.

20. 3ம் மனதாரரின் ஆதார் கார்டு நகல் ம.சா.ஆ.20.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-

விபத்தில் இறந்தவர் எனது கணவர். 2ம் மனுதாரர் எனது மகள், 3, 4 மனுதார்கள் மாமியார் மற்றும் மாமனார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. போலிசார் தகவல் சொல்லி எனக்குத் தெரியும். நான் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைபோய் பார்க்கும் போது என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் வீட்டில் இருந்து கிளம்பும் போது எங்கு போகிறார் என்று என்னிடம் சொல்லவில்லை. எனக்கு அப்போது குழந்தை பிறந்ததிருந்ததால் நான் என் பெற்றோர் வீட்டில் இருந்தேன். என் கணவர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து பைக்கிள் வெளியே போயிருந்தார். என் கணவரது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயம் என் கணவர் எச்.டி.எப்.சி வங்கியில் துணைமேலாளராக பணிபுரிந்து வந்தார். நின்றுகொண்டிருந்த லாரியின் பின்புறம் என் கணவர் ஓட்டி வந்த மோட்டார் பைக் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் அப்படி தான் சொன்னார்கள். 2ம் எதிர்மனுதாரர் லாரியின் உரிமையாளர் என்றும், 3ம் எதிர்மனுதாரர் லாரியின் ஓட்டுநர் என்றாலும் எனக்குத் தெரியாது. புகாரை யார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. என் கணவர் தான் அதிவேகமாகவும் கவனக்குரைவாகவும் ஓட்டி சென்று லாரியின் பின்புறம் மோதி விபத்தை

ஏற்படுத்தி கொண்டார் என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கவேண்யதில்லை என்றாலும் சரியல்ல. நான் குற்றப்பத்திரிக்கையை குறியீடு செய்யவில்லை என்றும், அதை தாக்கல்செய்தால் என் கணவர் மீது தவறு உள்ளது என்று தெரிந்துவிடும் என்றாலும் சரியல்ல. அது இரவு நேரம் என்பதாலும் கோவிட் சமயம் என்பதாலும் மின் விளக்குகள் எதுவும் அந்த இடத்தில் இல்லை. எதிர் திசையில் லாரி தவறாக நிறுத்தப்பட்டிருந்தது. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல. என் கணவர் பணிபுரிந்த வங்கியின் அதிகாரி மூலம் தான் என் கணவரது வருமானத்தை நிர்ணயிக்க முடியும் என்றாலும் சரியல்ல. என் கணவர் வருமான வரி செலுத்திவந்தார். அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.